**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**&**
**இந்திய வானிலைத்துறை**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை**
**ஊட்டி வட்டாரம், நீலகிரி மாவட்டம் வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(09.02.2022 முதல் 13.02.2022)**

**அறிக்கை எண் 11/2022** **தேதி 08.02.2022**

---

**ஊட்டி வட்டாரம், நீலகிரி மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 13.02.2022 08.30 வரை | | | | | |
|---|---|---|---|---|---|
| **தேதி** | **நாள்-1 09/02** | **நாள்-2 10/02** | **நாள்-3 11/02** | **நாள்-4 12/02** | **நாள்-5 13/02** |
| **மழை (மி.மீ)** | 0.2 | 0.0 | 0.0 | 2.8 | 8.1 |
| **அதிகபட்ச வெப்ப நிலை (°செ)** | 28.8 | 27.3 | 27.2 | 24.5 | 26.6 |
| **குறைந்தபட்ச வெப்ப நிலை (°செ)** | 13.7 | 12.7 | 14.2 | 16.0 | 16.2 |
| **மேக மூட்டம் (ஆக்டா)** | 6 | 2 | 4 | 7 | 6 |
| **அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%)** | 94-48 | 87-43 | 84-27 | 97-57 | 98-55 |
| **காற்றின் வேகம் (கி.மீ / மணி)** | 4.0 | 5.0 | 6.0 | 7.0 | 7.0 |

**ஊட்டி வட்டாரம், நீலகிரி மாவட்டம் எதிர்பார்க்கப்படும் வானிலை (09.02.2022 முதல் 13.02.2022)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்கள் இலோனமழை என எதிர்பார்க்கபடுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 24.5-28.8°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 12.7-16.2°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 84-98 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 27-57 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 04-07 கி.மீ அளவுக்கு வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

| | | |
|---|---|---|
| பொதுவான | வளர் பருவம் | காய்கறிபயிர்களில் வெட்டுபுழுக்களை கட்டுப்படுத்த, கோடை காலத்தில் மண்ணை ஆழமாக கொத்திவிடலாம் மற்றும் விளக்குப்பொறிகளை இரவு 7 மணி முதல் 10 மணி வரை அமைக்கலாம். |
| வெள்ளைப்பூண்டு | வளர் பருவம | இரவில் நிலவும் அதிக குளிர் மற்றும் பகலில் நிலவும் அதிக வெப்பம் காரணமாக, வெள்ளைப்பூண்டு பயிரில் இலைகருகல் நோய் பரவி வருகின்றது. கட்டுபடுத்த கார்பெண்டாசிம் 2 கிராம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு என்ற அளவில் பயிர்களின் மீது தெளிக்கவும். |
| தோட்டக்கலை பயிர்கள் | வளர் பருவம் | காபி தோட்டத்தில், கீழே விழும் பழங்களை அப்புறப்படுத்தல் மற்றும் அறுவடை கால முடிவில் மீதமின்றி முழுவதுமாக அறுவடை செய்வதன் மூலம் காபி பழத்துலைப்பான் தாக்குதலை கட்டுப்படுத்த முடியும். |

| | | |
|---|---|---|
| | | நிலவி வரும் தட்பநிலை காரணமாக, மிளகுச்செடியில் வாடல்நோயை தடுக்க, 25 கிராம் ட்ரைகோடெர்மா, 25 கிராம் சூடோமோனஸ் மற்றும் 500 கிராம் வேப்பம் புண்ணாக்கு கலந்து வேர்பகுதியில் இட்டு தண்ணீர் விடவும். |
| கால்நடைகள் | | வெயில் அதிகமான பகல் நேரங்களில் கறவை மாடுகளின் மேல் தண்ணீர் தெளித்து அதன் வெப்பத்தை தனிப்பதன் மூலம் பால் உற்பத்தி குறையாமல் பாதுகாக்கலாம். கோடை காலத்தில், அசோலாவை பசுந்தீவனமாக பயன்படுத்தலாம். |

**குறுஞ்செய்தி**

காய்கறிபயிர்களில் வெட்டுபுழுக்களை கட்டுப்படுத்த, கோடை காலத்தில் மண்ணை ஆழமாக கொத்திவிடலாம் மற்றும் விளக்குப்பொறிகளை இரவு 7 மணி முதல் 10 மணி வரை அமைக்கலாம்.

**ஒருங்கிணைப்பாளர் & பேராசிரியர் மற்றும் தலைவர்,**
**தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், த.நா.வே.ப.கழகம், உதகை.**